2018 மார்ச் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் பிற்பகல் 3-30 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

## 2. அரசினர் தனித் தீர்மானம்

### காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்க மத்திய அரசை வலியுறுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நதி நீர்ப் பிரச்சினை, காவேரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதார பிரச்சினையாக மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் உணர்வுகளோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்படியும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படியும் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு உடனடியாக அமைக்கவும், அவ்வமைப்புகள் அனைத்து அதிகாரம் கொண்ட அமைப்புகளாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தி பின்வரும் தீர்மானத்தை இம்மாமன்றத்தில் முன்மொழிகிறேன்:

#### தீர்மானம்

"காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும், உச்ச நீதிமன்றம் 16—2—2018 அன்று வழங்கிய தீர்ப்பின்படியும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையைத் திறம்படச் செயல்படுத்துவதற்கு, அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைத்து, அவற்றை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்று இந்த மாமன்றம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது."

இந்தத் தீர்மானத்தை இம்மாமன்றம் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

[2018 மார்ச் 15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். (குறுக்கீடு) அவர் request செய்திருக்கிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பது தொடர்பான மிக முக்கியமான இந்தத் தீர்மானத்தில் இன்றைக்கு உரையாற்றுவது ஒரு வகையில் ஓரளவுக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும், மார்ச் 9 ஆம் தேதிக்கு முன்பே சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்க வேண்டும் என்ற பெரும்பான்மையோரின் கருத்தை பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் இந்த மன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

காவேரி தீர்ப்பைச் செயல்படுத்துவதைப் பொறுத்தமட்டில், தமிழகத்தில் அனைத்துக் கட்சிகளும் சிந்தனையாலும், செயலாலும் ஒன்றுபட்டு நிற்கின்றன. இறுதித் தீர்ப்பின்படி, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் ஒழுங்காற்றுக் குழு ஆகியவற்றை அமைக்க மத்திய அரசுக்குப் போதிய அழுத்தம் கொடுக்க, பிரதான எதிர்க்கட்சி மற்றும் அனைத்துக் கட்சிகளின் ஒரே அணுகுமுறையை, ஒரே நோக்கத்தை, உணர்வுபூர்வமான ஒற்றுமையை இந்த அரசு முழு அளவில் பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

நமக்குள் ஒருவருக்கொருவர் குறைசொல்லிக்கொண்டிருப்பதற்கு இது உகந்த நேரம் அல்ல. ஏனென்றால், பாதிக்கப்படுவது, தமிழ்நாட்டு விவசாயிகள்; கேள்விக்குள்ளாக்கப்படுவது தமிழக மக்களின் உரிமை சார்ந்த தண்ணீர். கர்நாடக மாநில அரசு இடைக்காலத் தீர்ப்பின்படியும் தண்ணீர் திறந்துவிடவில்லை; இறுதித் தீர்ப்பின் அடிப்படையிலும் தண்ணீர் திறந்துவிடவில்லை. இந்திய நாட்டின் மிக உயரிய உச்ச நீதிமன்றமே உத்தரவிட்டும், அதை ஏற்று தண்ணீர் திறந்துவிட்டு அண்டை மாநில உறவை மேம்படுத்தவோ, தமிழக விவசாயிகளின் உரிமைப்படி தண்ணீரை அளிக்கவோ முன்வராமல் அடம்பிடித்து, சட்டத்திற்குப் புறம்பாகவும், நீதி நெறிமுறைகளுக்கு முரணாகவும் நடந்து கொண்டிருக்கிறது. இதுபோன்றதொரு சூழ்நிலையில்தான், காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை, உச்ச நீதிமன்றம் 16–2–2018 அன்று சில மாற்றங்களுடன் உறுதி செய்தது. கர்நாடகமும், மத்திய அரசும் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கும் சட்டப்படியான காரியத்தில் தாமதம் செய்துவிடக் கூடாது என்பதற்காகவே,

*2018 மார்ச் 15*] [திரு. மு.க. ஸ்டாலின்]

“தீர்ப்பு வெளியான தேதியிலிருந்து ஆறு வாரங்களுக்குள் காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும்” என்று உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாகக் கூறியது. அதுமட்டுமல்ல, அப்படி அமைப்பதற்கு ஆறு வாரங்கள் என்ற காலக்கெடு எந்தக் காரணத்தின் அடிப்படையிலும் நிச்சயம் நீட்டிக்கப்பட மாட்டாது என்று, யாரும் வேறு பொருள் கொள்ளமுடியாதபடி, அழுத்தம் திருத்தமாகவே உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது. தீர்ப்பில் உள்ள ஆங்கில வாசகத்தை சொல்வதென்றால், “It is hereby made clear that no extension shall be granted for framing of scheme on any ground” என்று தெள்ளத்தெளிவாகக் கூறியிருக்கிறது. ஒரு தீர்ப்பைச் செயல்படுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் இதைவிடக் கடுமையாக காலக்கெடு நிர்ணயிக்க முடியாது.

பிற்பகல் *3–35*

ஆனாலும், மத்திய அரசு அந்தத் தீர்ப்பை ஏற்று இன்று வரை காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்கவில்லை. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உள்நோக்கத்துடன் பொருள் கொண்டதால் தாமதம் ஏற்பட்டு வருகிறது. *16–2–2018* அன்று வெளிவந்த இறுதித் தீர்ப்பால் ஏற்கெனவே தமிழகத்திற்கு தரப்பட வேண்டிய காவேரி நீரில் *14.75* டி.எம்.சி. தண்ணீரை நாம் இழந்துள்ளோம். இதுதொடர்பாக நாம் அனைத்துக் கட்சிக் கூட்டத்திலேயே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும், அதற்காக முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துச்சென்று, பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, அழுத்தம் தரவேண்டும் என்றும், *22–2–2018* அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்தோம். தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சித் தலைவர்களை இதுவரை பிரதமர் சந்திக்கவில்லை. இது ஜனநாயகத்திற்கே நெருக்கடியான தருணம். இப்போது அதிகாரிகள் ஆய்வுக் கூட்டம் மட்டுமே நடைபெற்றிருக்கிறது. அதிலும் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டுமென்று, உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிடவில்லையென்று, மத்திய அரசு ஒரு நிலைப்பாட்டை எடுத்து செய்தியாக வெளியிட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால், உச்ச நீதிமன்றம் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும், அதுவும் பக்ராநங்கல் மேலாண்மை வாரியம்போல் அதிகாரமிக்க வாரியத்தை அமைக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம்

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2018 மார்ச் 15*

வலியுறுத்திக்கொண்டிருக்கிறது. உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டி இருக்கக்கூடிய Scheme பற்றி சில சட்ட வல்லுநர்களிடம் நான் கருத்து கேட்டபோது, அவர்களும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள Scheme என்பது காவேரி மேலாண்மை வாரியம்தான் என்றும், அதை ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு நிச்சயம் அமைத்தே தீரவேண்டுமென்றும், கூறியிருக்கிறார்கள். காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பில் நீர் பங்கீட்டு முறையில் மட்டுமே உச்ச நீதிமன்றம் தீர்ப்பு மாற்றம் செய்ததே தவிர, நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பில் வேறு எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. அப்படியே அந்த இறுதித் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அதேபோல், மத்திய அரசைப் பொறுத்தவரையில் Scheme எங்கள் விருப்பப்படிதான் அமைக்க முடியும் என்றால்,— ஏனென்றால் நதிநீர் தாவா சட்டப் பிரிவு 6A–யில் 'may' என்றுதான் இருக்கிறது என்ற வாதத்தையும் உச்ச நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. அத்துடன் நில்லாமல் Central Government shall frame the Scheme என்றே உச்ச நீதிமன்றம் அறுதியிட்டு, உறுதியாகக் கூறியிருக்கிறது. ஆகவே, காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பது குறித்து எந்தவித ஆலோசனையும் தேவையில்லை. சென்றமுறை மூன்று தினங்களுக்குள் காவேரி மேலாண்மை வாரியத்தை அமையுங்கள் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டபோது, மாநில அரசின் சார்பில் நியமிக்க வேண்டிய உறுப்பினரின் பெயரைக் கொடுங்கள் என்று எப்படி மத்திய அரசு மாநில அரசைக் கேட்டதோ, அதேமாதிரி இந்த முறையும், நம் மாநிலத்தின் பிரதிநிதி பெயரைக் கேட்டு, வாங்கி, இந்நேரம் காவேரி மேலாண்மை வாரியத்தை அமைத்திருக்க வேண்டும். ஆனால், இந்த முறைகள் எதிலும் அக்கறைகாட்டாமல் மத்திய அரசு உச்ச நீதிமன்றத் தீர்ப்பை செயல்படுத்துவதில் இவ்வளவு தயக்கமும், குழப்பமும் செய்து வருவது மிகுந்த கண்டனத்திற்குரியது.

நமது விவசாயப் பெருமக்கள் இந்த எதிர்மறைப் போக்கைப் பார்த்து குமுறிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஆறு வாரக் காலத்திற்குள் காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்க, மேலும் காலதாமதம் செய்யாமலும், வேறு உத்தி எதையும் கையாளாமலும், மத்திய அரசு உடனடியாக முன்வர வேண்டும். முதலில் அனைத்துக் கட்சிகளின் உணர்வுகளும் ஒட்டுமொத்தமாக மத்திய அரசுக்கு உணர்த்தப்பட்டது. இந்தத் தீர்மானத்தின்மூலம்

*2018 மார்ச் 15*] [திரு. மு.க. ஸ்டாலின்]

தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வும் ஒற்றுமையும் நோக்கமும் மத்திய அரசுக்கு உணர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, ஏற்கெனவே இதேமன்றத்தில் "நீட்" உள்ளிட்டவற்றில் மாநில உரிமைகள் தொடர்பாக நாம் நிறைவேற்றிய தீர்மானங்களை, மக்களாட்சி நெறிகளுக்கு எதிராக அவமதித்ததுபோல், இந்தத் தீர்மானத்தையும் மத்திய அரசு அவமதிக்கும் என்றால், மத்திய அரசு தமிழக மக்களுடைய கடுங்கோபத்தை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை வரும். தமிழ்நாடு தன் காவேரி உரிமையை, யாருக்காகவும், எக்காரணம் கொண்டும் எப்போதும் விட்டுக்கொடுக்காது என்பதற்கு ஏற்ற அடையாளமாக நாமெல்லாம் இன்று கூடி இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றிட இருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தத் தீர்மானத்திற்கும் உச்ச நீதிமன்றம் விதித்திருக்கக்கூடிய கெடுவிற்கும் மிகக் குறைந்த இடைவெளியே இருக்கிறது. அதனால்தான் மார்ச் முதல் வாரத்திலேயே நாம் சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் என்கிற முறையிலே நான் வலியுறுத்தினேன். ஆனாலும், இந்த நேரத்தில் தமிழக மக்களின் உணர்வுகளை ஒற்றுமையுடன் பிரதிபலிக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில், இந்தத் தீர்மானத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் முழு ஆதரவை வழங்குகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தத் தீர்மானத்தின் பின்னணியில் மத்திய அரசுக்கு முழு அழுத்தம் கொடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் துரித கதியில் எடுக்க வேண்டும். காவேரிப் பிரச்சினை நம் ஒவ்வொருவரின் இரத்தத்திலும் இரண்டறக் கலந்திருக்கக்கூடிய, ஊறிப்போய் இருக்கக்கூடிய பிரச்சினை. நாம் காவேரி நீரைப் பருகி வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

*பிற்பகல் 3–40*

விவசாயத்திற்கும், குடிநீருக்கும் ஜீவாதாரப் பிரச்சினையாக இருக்கக்கூடிய காவேரி நீர் உச்ச நீதிமன்றம் திருத்தியுள்ள நடுவர் மன்றத் தீர்ப்பின் அடிப்படையில் தமிழகத்திற்கு தங்குதடையின்றி கிடைப்பதற்கு—குறிப்பாக மாதந்தோறும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். அதற்கு முதல் தேவை காவேரி மேலாண்மை வாரியம். அதை இனியும் காலம் தாழ்த்த நாம் அனுமதிக்கக் கூடாது. ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைக்கவில்லை என்று சொன்னால் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள்

*அனைவரும் கூண்டோடு இராஜினாமா செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இராஜினாமா செய்வதற்கு நாங்கள் அத்தனைபேரும் தயாராக இருக்கிறோம் என்று கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட நெருக்கடியின் உச்சத்தை உருவாக்க மத்திய அரசு இடம் தராது என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, இந்தத் தீர்மானத்தை இதயபூர்வமாக ஆதரித்து என் உரையை நிறைவு செய்கிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, நாம் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் பேசிவிட்டோம். நீங்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதை ஒரே நிமிடத்தில் வழிமொழிந்துவிட்டு உட்காருங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *உரையை முடித்துவிடுவேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் அப்படித்தான் என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *நான், அவ்வாறே உரையை முடித்துவிடுகிறேன் என்று சொல்கிறேன் அல்லவா! இல்லை, நீங்கள் சொன்ன நேரத்திற்கு மேலே பேசமாட்டேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதுதான் எங்களது நோக்கம். உச்ச நீதிமன்றம் ஒரு தெளிவான தீர்ப்பைத் தந்திருக்கிறது. அந்தத் தீர்ப்பைச் செயல்படுத்த வேண்டிய கடமை மத்திய அரசுக்கு இருக்கிறது. அதைச் செயல்படுத்துவதற்கு நாங்கள் அரசுக்கு உறுதுணையாக இருப்போம் என்பதைச் சொல்வதற்காகத்தான், நான் உங்களிடம் அனுமதி கேட்டேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மிக்க நன்றி.*

**திரு. கரி. இராமசாமி:** *நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தனித் தீர்மானத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பாக முழு மனதுடன் வரவேற்கிறேன்; எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

*2018 மார்ச் 15*]

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைப்பது சம்பந்தமாக இங்கே முன்மொழிந்திருக்கக்கூடிய தீர்மானத்தை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் வழிமொழியப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக வரவேற்று, வழிமொழிந்து, தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக நாம் அனைவரும் ஒற்றுமை உணர்வோடு பணியாற்றக்கூடிய அனைத்துப் பணிகளிலும் எங்களுடைய ஒத்துழைப்பு இருக்கும்; தொடர்ந்து நம்முடைய உரிமைகளை மீட்டிட நாம் அனைவரும் ஒற்றுமை உணர்வோடு பணியாற்றுவோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை வரவேற்று, வழிமொழிகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கிடையே பல காலமாக இருந்து வந்த இப்பிரச்சினையில் மாநிலங்களுக்கிடையே பல முறை பேச்சுவார்த்தை நடைபெற்றும், மத்திய அரசு தலையிட்டும் தீர்வு காண முடியவில்லை. மதராஸ் மாகாணத்திற்கும், மைசூர் சமஸ்தானத்திற்குமிடையே 1892 மற்றும் 1924 ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் காவேரி நதி நீரில் தமிழ்நாட்டிற்குள்ள உரிமைகளைத் தெளிவாக்குகின்றன. இருப்பினும் 1924 ஆம் ஆண்டைய மதராஸ்—மைசூர் ஒப்பந்தத்தை மீறும் வகையில் கர்நாடகம் 1960—களின் பின்பகுதியிலும், 1970—களின் தொடக்கத்திலும் காவேரி நதி நீரைப் பெற உரிமையுள்ள மாநிலங்களைக் கலந்தாலோசிக்காமலும், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும் பல்வேறு அணைகளைக் கட்ட நடவடிக்கை எடுத்தது. தமிழ்நாடு காவேரி நீர்ப் பாசன விளைபொருட்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்பு சங்கத்தினர், 1983 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தனர். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1986 ஆம் ஆண்டு காவேரி நடுவர் மன்றம் அமைக்கக் கோரி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார்கள். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டில் அவ்வழக்கில் தன்னை இணைத்துக்கொண்டது. இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம்*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 மார்ச் 15

4–5–1990 அன்று நடுவர் மன்றத்தை அமைக்க மத்திய அரசிற்கு உத்தரவிட்டது. இதனடிப்படையில் மத்திய அரசு 2–6–1990 அன்று காவேரி நடுவர் மன்றத்தை அமைத்து, அதனை மத்திய அரசிதழில் வெளியிட்டது. காவேரி நடுவர் மன்றம் 25–6–1991 அன்று ஓர் இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. இதில் மேட்டூர் அணைக்கு ஆண்டொன்றிற்கு 205 டி.எம்.சி. அடி நீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் கர்நாடகம் அதன் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீரைத் திறந்து விட வேண்டும் என ஆணையிட்டது. இதில் புதுச்சேரிக்கு 6 டி.எம்.சி. அடி நீர் போக, தமிழ்நாட்டின் பங்கு 199 டி.எம்.சி. அடி நீர் ஆகும். மேலும் மாதாந்திர மற்றும் வாராந்திர அடிப்படையில் நீர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், இறுதித் தீர்ப்பு அளிக்கப்படும் வரையில் இந்த இடைக்கால ஆணை நடைமுறையில் இருக்கும் என்றும் அந்த இடைக்கால ஆணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த இடைக்கால ஆணைக்கு எதிராக ஓர் அவசரச் சட்டத்தினை கர்நாடக அரசு இயற்றியது.

பிற்பகல் 3–45

மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள், கர்நாடக அரசின் அவசரச் சட்டம் குறித்து உச்ச நீதிமன்றத்தின் கருத்தை அளிக்கக் கோரினார். இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணை செல்லும் என்றும், அது மத்திய அரசிதழில் வெளியிடப்பட வேண்டுமென்றும், கர்நாடக அரசின் அவசரச் சட்டம் செல்லாது என்றும் 22–11–1991 அன்று தனது கருத்துரையை வழங்கியது. இதனடிப்படையில், 10–12–1991 அன்று காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகு, காவேரி நடுவர் மன்றம் 16 ஆண்டுகளாக விசாரணை மேற்கொண்டு, 5–2–2007 அன்று இறுதி ஆணையை பிறப்பித்தது. காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்படி, கர்நாடக அரசு பில்லிகுண்டுலு நீரளவை நிலையத்தில் ஆண்டுக்கு 192 டி.எம்.சி. அடி நீரை மாதாந்திர அடிப்படையில் வழங்க வேண்டும்; இந்த இறுதி ஆணையைத் திறம்படச் செயல்படுத்தி மாநிலங்களுக்குரிய பங்கு நீரினை உரிய காலத்தில் வழங்குவதற்கு ஏதுவாக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்க வேண்டும் என்று காவேரி நடுவர் மன்றம் பரிந்துரை செய்தது. காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை எதிர்த்து கர்நாடக மற்றும் கேரள மாநில அரசுகள் உச்ச நீதிமன்றத்தில் சிவில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்தன. காவேரி

2018 மார்ச் 15] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

நடுவர் மன்ற இறுதி ஆணையிலுள்ள சில பகுதிகளை மேலாய்வு செய்யக்கோரி தமிழ்நாடு அரசும் ஒரு சிவில் மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், மத்திய அரசிதழில் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட வேண்டுமென மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு பல்வேறு கடிதங்கள் வாயிலாகவும், கோரிக்கை மனுக்கள் வாயிலாகவும் இடையறாத முயற்சிகளை மேற்கொண்டு வந்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சிகளாலும், உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டினாலும், (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது உங்கள் கருத்தைச் சொல்லுங்கள், நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. நாங்கள் பேசும்போது இடைமறித்துப் பேசுவதற்கு உங்களுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. (குறுக்கீடுகள்) என்னுடைய கருத்தை நான் சொல்கிறேன். உங்களுடைய கருத்தை நீங்கள் தாராளமாகச் சொல்லலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பது குறித்த கருத்துகளைச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** உங்கள் கருத்துகளைத் தெரிவிக்க வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லையே! (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பது குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறார். அதனால், விவாதம் வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** எங்களது தலைவர் கூறிய கருத்தை நாங்கள் இந்த அவையிலே கூறுவதில் என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பது குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறார். அதனால், விவாதம் வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, இதில் விவாதம் எதுவும் வேண்டாம். (குறுக்கீடுகள்)

[2018 மார்ச் 15

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை 19—2—2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டு, நடைமுறைக்கு வந்தது. (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு அமைக்கவில்லை. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை. இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடந்த விவரங்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார். வேறொன்றுமில்லை.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *நீங்கள் சொன்னதை நாங்கள் வேண்டாம் என்று மறுத்தோமா? (குறுக்கீடுகள்) உங்கள் கருத்துகள் எதையாவது எதிர்த்தோமா?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதை யாரும் மறுக்கவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதை யாரும் மறுக்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்தை மறுத்து ஒன்றும் பேசவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடந்த விவரங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார், அவ்வளவுதான். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *என்னுடைய கருத்தைச் சொல்வதற்குத் தடை கிடையாது. (குறுக்கீடுகள்) உங்களுடைய கருத்தைச் சொல்ல வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்) உங்களுடைய கருத்துகளைச் சொல்ல வேண்டாமென்று நாங்கள் தடுக்கவில்லையே! (குறுக்கீடு) நீங்கள் மூத்த உறுப்பினர், நீண்ட காலமாக இந்த அவையின் உறுப்பினராக இருப்பவர், அமைச்சராக இருந்தவர். உங்கள் கருத்துகளைக் கூறும்போது நாங்கள் இடைமறிக்கவில்லை; நீங்கள் கூறிய அனைத்துக் கருத்துகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. நான் இந்தக் கருத்தைச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்) உங்களுடைய கருத்துகளை நீங்கள் சொல்லுங்கள், நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)*

*2018 மார்ச் 15]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு தரப்பட்டது. அவர் தனது கருத்துகளை முழுமையாகப் பதிவு செய்துவிட்டார். அதற்குப் பின்னர் தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த விவரங்களை சொல்லிக்கொண்டு வருகிறார். (குறுக்கீடுகள்) அதில் என்ன இருக்கிறது? ஒன்றுமேயில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறிய எந்தக் கருத்திற்கும் இந்தப் பக்கத்திலிருந்து யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அவர் பேசிய கருத்துகள் அத்தனையும் பதிவாகியிருக்கின்றன. (குறுக்கீடுகள்) அவர் ஒன்றும் எதிர்க்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, விவாதம் வேண்டாம். (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே உங்களிடம், இதில் பெரிய அளவில் விவாதம் எதுவும் செய்ய வேண்டாம் என்று அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தின்போது தெளிவாகச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நம்முடைய ஒற்றுமையை, நம் தமிழ்நாட்டினுடைய ஒற்றுமையை நாட்டிற்குத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதனால், அந்தக் கருத்து இருக்கட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவரங்களைச் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும், பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) சரி, என்னவென்று சொல்லுங்கள். ஒரு நிமிடம் இருங்கள்.*

*பிற்பகல் 3–50*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழைப்பின் பேரிலே, நானும், எங்கள் துணைத் தலைவர் அவர்களும், அவருடைய அறைக்கே வந்து, அவரிடத்தில் இதுகுறித்து பேசிக் கொண்டிருந்தபோது சட்டமன்றத்தில் இப்படியொரு தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டும் என்று நாங்கள் எங்கள் கருத்தைச் சொன்னோம். அப்போது எங்கள் துணைத் தலைவர் அவர்கள் வெளிப்படையாகச் சொன்னார்கள். "இதில் அரசியல் வேண்டாம். நாங்களும் எங்கள் தலைவரைப் பற்றி எதுவும் சொல்லப்போவதில்லை. அதேபோல் நீங்களும் எதைப்பற்றியாவது சொன்னால், முழுமையான வரலாற்றைச் சொல்ல வேண்டி*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2018 மார்ச் 15

வரும். பாதி வரலாற்றைச் சொல்லிவிட்டு, மீதியிருக்கக்கூடிய வரலாற்றைச் சொல்லவில்லையென்றால், அப்போது நாங்களும் சில விவரங்களைச் சொல்லவேண்டியது வரும்" என்று சொன்னார்கள். அதனால்தான் உங்கள் அறையிலேகூட, என்னுடைய உரையில் தேவையற்ற எந்த விவாதமாவது இருந்தால் அதை நீக்கிவிடுங்கள் என்று சொல்லிவிட்டுத்தான், உங்களிடத்திலே அனுமதி வாங்கி இங்கே பேசியிருக்கிறேன். ஆகவே, நீங்கள் சொல்வதைத் தவறு என்று சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால், நாங்களும் பேசுகிற பேச்சிலே அதைக் குறிப்பிட்டிருக்கக்கூடிய வாய்ப்புகள் எங்களுக்குக் கிடைத்திருக்கும். அதைத்தான், அந்த உணர்வைத்தான் அவர் சொல்லியிருக்கிறார். வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எந்தக் கருத்தைச் சொன்னாலும், நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லையே! உங்களுடைய கருத்துகளைப் பதிவு செய்வதற்கு நாங்கள் தடுத்தால்தானே அல்லது மறுப்புத் தெரிவித்தால்தானே, அதில் நீங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். (குறுக்கீடு) நான் பேசிவிடுகிறேன், அதற்குப் பிறகு நீங்கள் சொல்லுங்கள். அதாவது, காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைய எப்படியெல்லாம் தலைவர்கள் வாதாடியிருந்தார்கள் என்பதைப் பற்றிய விளக்கம் சொன்னேன். இதில் என்ன தவறு இருக்கிறது? ஒன்றுமே இல்லையே! எந்தக் கருத்தையும் நான் புதியதாகப் பதிய வைக்கவில்லையே! நீங்கள் என்ன தவறு கண்டுபிடித்தீர்கள் என்று சொல்லுங்கள், திருத்திக்கொள்ளலாம். இதில் நாங்கள் எதுவுமே சொல்லவில்லையே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவர்கள் தலைவரை அவர்கள் சொல்கிறார்கள். உங்கள் தலைவரை நீங்கள் சொல்லியிருந்தால் யாரும் மறுக்கவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள், சொல்லுங்கள். விவாதம் வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், விவாதம் வேண்டாம்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒன்றும் விவாதம் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிக்கை படிப்பதில் எனக்கு ஒன்றுமில்லை.

*2018 மார்ச் 15]* [திரு. துரைமுருகன்]

காவேரிப் பிரச்சினையைப் பற்றிச் சொல்லுகிறபொழுது, எங்களுடைய தலைவர், மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள், உங்களுடைய முதலமைச்சர் அம்மையார் அவர்கள் எல்லோரும் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) சொல்கிறேன், ஒரேயொரு நிமிடம்.

இந்த காவேரிக்கு நடுவர் மன்றம் கொண்டு வந்தவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள். முதலிலேயே தீர்மானம் போட்டவர் அவர்கள். இடைக்காலத் தீர்ப்பைக் கொண்டு வந்தவர் அவர்கள். அனைத்தும் தெரியும். ஆனால், மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் மத்திய சர்க்காருக்கு நடுவர் மன்றம் அமையுங்கள் என்று கடிதம் எழுதினார். கடிதம்தான். ஆனால், கலைஞர் அவர்கள் இரு முறை இந்த மன்றத்தில் தீர்மானம் போட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், போதும் விவாதம்.

**திரு. துரைமுருகன்:** இப்போது நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டால், இதற்கு ஆரம்பம் முதல் அனைத்தும் செய்தவர், இதற்குத் தீர்மானம் போட்டவர், Fact Finding Committee அமைத்தவர், நடுவர் மன்றம் கொண்டு வந்தவர், இடைக்காலத் தீர்ப்பைக் கொண்டு வந்தவர், அதற்கு அதிகாரம் உண்டு என்று உச்ச நீதிமன்றத்தில் நீதி வாங்கியவர், இறுதித் தீர்ப்பு வாங்கியவர் எல்லாம் கலைஞர், கலைஞர், கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். இதற்குத்தான் நான் என்னுடைய அறையிலே உங்களிடம் சொன்னேன். பேசினால் ஒன்றுக்கொன்று விவாதம் வரும். விவாதம் இல்லாமல் நிறைவேற்றலாம் என்று நான் சொன்னேன். நீங்கள்தான் பேச வேண்டும் என்று சொன்னீர்கள். அப்படி நீங்கள் பேச வேண்டும் என்று சொல்லும்போது, அவர்கள் பேசுவதை நான் மறுக்க முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டபோதிலும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு அமைக்கவில்லை. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 மார்ச் 15

ஆணையின்படி காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடக்கோரி, இடைக்கால மனு ஒன்றை 18–3–2013 அன்று தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இந்த மனுவினை 10–5–2013 அன்று விசாரித்த உச்ச நீதிமன்றம் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையில் ஒரு தற்காலிக ஏற்பாடாக காவேரி மேற்பார்வைக் குழு ஒன்றை அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிட்டது. இந்த ஆணையின்படி மேற்பார்வைக் குழுவினை மத்திய அரசு 22–5–2013 அன்று அமைத்தது. மத்திய அரசு தற்காலிக ஏற்பாடாக மேற்பார்வைக் குழு அமைத்தபோதிலும், காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை முழுமையாகச் செயல்படுத்துவதற்கு ஒரு நிரந்தர அமைப்பு வேண்டும் என்பதால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு பல கோரிக்கை மனுக்கள் மற்றும் கடிதங்கள் வாயிலாக (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்க தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். இவை தவிர, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் நடக்கும் இந்த அரசு கோரிக்கை மனுக்கள் மற்றும் கடிதங்கள் வாயிலாக இவ்விரு அமைப்புகளையும் விரைவில் அமைக்க வேண்டி மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

மேலும், 5–12–2014, 27–3–2015 மற்றும் 2–9–2016 ஆகிய தேதிகளில் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு உடனடியாக அமைக்க வேண்டுமென்று, இம்மாமன்றத்தில் ஒருமனதாக தீர்மானங்கள் இயற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மேலும், சட்ட ரீதியான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும், மத்திய அரசு தமிழ்நாட்டின் கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லை. மாநில அரசுகள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் விசாரணைக்கு உகந்ததா என்பது பற்றி உச்ச நீதிமன்றத்தில் எல்லா மாநில அரசுகளும், மத்திய அரசும் வாதிட்டன.

பிற்பகல் 3–55

இம்மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு உகந்தவை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்த வழக்கு 20–9–2016 அன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, காவேரி மேலாண்மை

*2018 மார்ச் 15*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

*வாரியத்தை நான்கு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. எனினும், மத்திய அரசு தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் 4–10–2016 அன்று இந்த உத்தரவைத் தள்ளி வைத்தது. இதன் பின்னர், ஜுலை 2017 முதல் செப்டம்பர் 2017 வரை இறுதி கட்ட விவாதங்கள் உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றன. இதில், கர்நாடக அரசு 9 நாட்களும், கேரள அரசு 2 நாட்களும், தமிழ்நாடு அரசு 13 நாட்களும், புதுச்சேரி அரசு மற்றும் மத்திய அரசு தலா ஒரு நாளும் தங்களின் வாதங்களை எடுத்துரைத்தன. அனைத்துத் தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த உச்ச நீதிமன்றம் 20–9–2017 அன்று தீர்ப்பினை ஒத்திவைப்பதாக அறிவித்தது. உச்ச நீதிமன்றம் 16–2–2018 அன்று வழங்கிய தீர்ப்பில் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையைச் செயல்படுத்துவதற்கு ஒரு திட்டத்தை மத்திய அரசு அமைக்க வேண்டும் என பத்தி 403, பக்கங்கள் 456–457–ல் குறிப்பிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:*

"We have referred to the aforesaid passages as the award of the Tribunal has to be treated as decree of the Supreme Court. It is so stated in Section 6(2) to give teeth to the award passed by the Tribunal so that none of the States can raise objection to the same and be guided by the directions of the Tribunal. The purpose of framing the scheme is exclusively for implementation of the award. The authorities cited by Mr. Ranjit Kumar (Solicitor General), we are afraid, are of no assistance in the present context. It needs no special emphasis to state that the purpose of Section 6A is to act in the manner in which the award determines the allocation and decides the dispute with regard to allocation or sharing of water. Keeping that in view, we direct that a scheme shall be framed by the Central Government within a span of six weeks from today so that the authorities under the scheme can see to it that the present decision which has modified the award passed by the Tribunal is smoothly made functional and the rights of the States as determined by us are appositely carried out. When we say so, we also categorically convey that the need based monthly release has to be respected. It is hereby made clear that no extension shall be granted for framing of the scheme on any ground."

*மேற்கண்ட அந்தத் தீர்ப்பின்மூலம் தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய நீரின் அளவில் 14.75 டி.எம்.சி. அடி நீர் குறைக்கப்பட்டுள்ளது தமிழ்நாட்டிற்கு வருத்தம் அளிப்பதாக*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 மார்ச் 15

உள்ளது. எனவே, இதுகுறித்தும் காவேரி நதி நீர்ப் பங்கீடு தொடர்பாக உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இறுதித் தீர்ப்பு குறித்தும் விவாதிப்பதற்கு எனது தலைமையில் 22–2–2018 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் மற்றும் விவசாயிகள் சங்கத் தலைவர்கள் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன:

(அ) தமிழ்நாட்டிற்குரிய பங்கு நீரினை உரிய காலத்தில் வழங்குவதற்கு ஏதுவாக அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உச்ச நீதிமன்றத்தின் 16–2–2018 ஆம் நாளிட்ட தீர்ப்பின்படி 6 வார காலத்திற்குள் மத்திய அரசு அமைக்க வேண்டி வலியுறுத்தப்படும்.

(ஆ) உச்ச நீதிமன்றத் தீர்ப்பில், தமிழ்நாட்டிற்கு காவேரி நடுவர் மன்றம் இறுதி ஆணையில் வழங்கிய நீரில் 14.75 டி.எம்.சி. அடி நீரைக் குறைத்து, கர்நாடகத்திற்கு கூடுதலான நீரை வழங்கி உத்தரவிட்டது குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு, சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(இ) மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள், விவசாயிகள் சங்கத் தலைவர்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவுடன் மாண்புமிகு பாரதப் பிரதமரை நேரில் சந்தித்து, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்கவும் மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் தமிழ்நாட்டிற்கு சாதகமாக உள்ள அம்சங்களை உடனடியாக நிறைவேற்றித் தருமாறும் வலியுறுத்தப்படும்.

24–2–2018 அன்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த தினத்தில் மானிய விலையில் மகளிருக்கு 'அம்மா இரு சக்கர வாகனங்கள்' வழங்கும் திட்டத்தின் துவக்க விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி உரிய காலத்திற்குள் அமைத்துத் தருமாறு நான் நேரில் கேட்டுக்கொண்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*2018 மார்ச் 15*]

பிற்பகல் *4–00*

இதன் தொடர்ச்சியாக, *25–2–2018* அன்று மாண்புமிகு மத்திய சாலைப் போக்குவரத்து நெடுஞ்சாலை மற்றும் துறைமுகம், நீர் வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தபோது அவரிடம் இதனை வலியுறுத்தி நேரில் கடிதம் அளித்தேன். மேலும், எனது தலைமையில், அனைத்து கட்சித் தலைவர்கள், விவசாய சங்கங்களின் தலைவர்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து மேற்கண்ட கோரிக்கையினை வலியுறுத்த நேரம் கேட்டு கடிதம் அனுப்பினேன். உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையினைச் செயல்படுத்துவது குறித்து மத்திய நீர் வள ஆதாரத் துறைச் செயலாளர் அவர்கள் *5–3–2018* நாளிட்ட கடிதம் வாயிலாக, *9–3–2018* அன்று புதுடில்லியில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி மாநில தலைமைச் செயலாளர்கள் மற்றும் நீர் வள ஆதாரத் துறை செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு தங்களது மாநிலத்தின் கருத்துகளைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் எடுத்துரைக்கப்பட வேண்டிய கருத்துகள் மற்றும் தமிழ்நாட்டின் நிலை குறித்து விவாதிக்க மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் *7–3–2018* அன்று நான் கலந்தாலோசித்தேன். மத்திய அரசு கூட்டியுள்ள கூட்டத்தில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படியும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும் அனைத்து அதிகாரங்களையும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள *6* வார காலக்கெடுவிற்குள் மத்திய அரசு அமைப்பதற்கு தமிழ்நாட்டின் சார்பில் வலியுறுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தினேன். காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பு மற்றும் ஆணையினைச் செயல்படுத்துவதற்கு ஒரு திட்டத்தை (scheme) *6* வார காலத்திற்குள் மத்திய அரசு அமைக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள திட்டம் என்ன என்பதை *1956* ஆம் ஆண்டு பன்மாநில நதி நீர்த் தாவா சட்டம் பிரிவு 6A*(2)*–ல் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இதன்படி, 'திட்டம்' என்பது நடுவர் மன்ற இறுதி ஆணையையும், தற்போது உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் செயல்படுத்த ஓர் அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்றும், அந்த அமைப்பின் உறுப்பினர்களின் அதிகார வரம்பு மற்றும் செயல்பாடு ஆகியன வரையறுக்கப்பட

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 மார்ச் 15

வேண்டுமென்றும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இந்த நிலையில் உச்ச நீதிமன்றம் அதன் 16–2–2018 நாளிட்ட தீர்ப்பில் பத்தி 397–ல் நீர்ப் பங்கீட்டில் மாற்றம் செய்யப்படுவதைத் தவிர, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ள இதர இனங்களில் மாற்றம் ஏதும் தேவையில்லை என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுதவிர, பத்தி 399–ல் காவேரி நடுவர் மன்றம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் மத்திய நீர் வளக் குழுமம் ஆகியவற்றின் உதவியோடு நீர் விடுவிப்பதை மாதாந்திரவாரியாக கண்காணிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளதை உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. மேற்கண்ட தீர்ப்பின்படி, உச்ச நீதிமன்றம் குறிப்பிட்ட திட்டம் என்பது காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ள காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுதான் என்றும், அதுமட்டுமல்லாமல் இவ்வமைப்புகள் அனைத்து அதிகார வரம்புகளுடன் அமைக்கப்பட வேண்டுமென்றும் தெளிவாக உள்ளது. காவேரி மேலாண்மை வாரியத்தை காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு அமைப்பதைத் தவிர, மத்திய அரசுக்கு வேறு மாற்று வழி இல்லை எனத் தமிழ்நாடு அரசின் சார்பில் தெளிவுபடுத்தப்பட்டது. எனவே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளபடி 6 வார காலத்திற்குள் மத்திய அரசு காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்க வேண்டுமெனவும் தமிழ்நாடு அரசின் சார்பாக வலியுறுத்தப்பட்டது. மத்திய அரசின் சார்பில் 9–3–2018 அன்று கூட்டப்பட்ட கூட்டத்தில் மேற்கண்ட கருத்துகள் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன. எனவே, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படியும் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு உடனடியாக அமைக்கவும், அவ்வமைப்புகள் அனைத்து அதிகாரமும் கொண்ட அமைப்புகளாக இருக்க வேண்டுமென்பதையும் வலியுறுத்துகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னால் கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தினை ஒருமனதாக நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*2018 மார்ச் 15*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* *(ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை.*

*தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 19–3–2018, திங்கட்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 4–04 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

———